# 17 தூய ஆவியின் அருள்

**திருமுழுக்கானது கிறிஸ்துவைப் பின்பற்றும் அனைவருக்கும் மிகவும் சிறப்பான சமய பாரம்பரிய முறையாகும். இன்றைய திருச் சபையில் நடைபெறும் இச்சடங்குமுறை ஓர் வெளிஅடையாளம் ஆகும். இதன் மூலமாக தூய ஆவியானவரின் வருகை ஏற்றுக் கொள் ளப்படுகின்றது. கிறிஸ்தவ சபைகள் சிறுவர் வாலிபர் பெரியோர் ஆகியோரின் வயது எல்லையின்றி திருமுழுக்கை ஏற்றுக்கொள்ளும் போது அதன் மூலம் கிறிஸ்துவை பின்பற்றுகிறவர்களாக உறுதி செய்யப் படுகின்றது. திருமுழுக்கின் மூலம் தூய ஆவியானவரின் பிரசன்னத் தால் தைரியத்தையும் பெலத்தையும் பெற்று தமது வாழ்வில் ஒரு புதிய மாற்றத்தை அனுபவிப்பர். நாம் இப்போது இயேசு திருமுழுக்கு பெற்ற சம்பவத்தை ஆராய்ந்து தூய ஆவியானவரின் மூலமாக எமது வாழ்வில் புதிய மாற்றத்தை அனுபவிக்கும் வழிகாட்டுதலை தேடுவோம்.**

**லூக்கா:** 3:21-22

இயேசுவின் காலத்திற்கு முன்னரே யூதமக்களிடையே திருமுழுக்கு என்னும் சடங்குமுறை நிலவி வந்தது. அது தண்ணீரில் மூழ்கி தூய்மைப்படுத்தும் ஒரு வெளி அடையாளம் மட்டுமே ஆகும். ஆனால் திருமுழுக்கு யோவான் இதற்கு ஒரு புதிய விளக்கத்தைக் கொடுத்து மக்களை மனந்திரும்பும்படி யோர்தான் நதியில் திருமுழுக்குப் பெறுவதற்கு அழைத்தார். முன்னைய பாடத்தில் நீங்கள் அறிந்து கொண்டபடி திருமுழுக்கு யோவான் தனக்குப் பின்னால் வருபவரை ஏற்றுக் கொள்வதற்காக மக்களின் மனங்களை தூய்மைப்படுத்துவதற்கும் அதன் மூலம் அவர்களின் பாவச்செயல்களில் இருந்து விலகுவதற்கும் அழைப்பு விடுத்தார்.

திருமுழுக்கு யோவான் மக்களைப் பார்த்து எனக்குப் பின்வருபவர் தூய ஆவி என்னும் நெருப்பால் உங்களுக்கு திருமுழுக்குக் கொடுப்பார் என கூறினார். ''நெருப்பு'' இறை பிரசன்னமாகும். பாவத்தைச் சுட்டெரித்து தூய்மையாக்கும் அடையாளமாகும். தூயஆவியானவர் புதிய வாழ்வை வாழ்வதற்கான ஒளியாக தைரியத்தையும் சக்தியையும் தருவது உறுதியாகின்றது. திருமுழுக்கானது எமக்கு கிடைத்த இறை வரப்பிரசாதமாகும். இதனால் கிடைக்கும் அனுபவத்தின் மூலம் இறையரசின் பிரஜைகளாக பயமின்றி சான்று பகர்வதற்கான வழிகாட்டுதல் எமக்கு கிடைக்கின்றது. திருமுழுக்கு யோவான் மனந்திரும்பி வந்த மக்களுக்கு யோர்தான் நதியில் திருமுழுக்கு கொடுத்துக் கொண்டிருக்கும்போது இயேசுவும் அங்கே வந்தார். அவர் மனந்திரும்ப வேண்டிய அவசியம் இல்லாத போதும் இத்திருமுழுக்கில் கலந்து கொண்டது ஏன் என்பதை முன்னைய பாடங்களில் கற்றோம்.

இயேசு தாழ்மை உடையவராக தனது சொந்த சகோதரரான திருமுழுக்கு யோவானிடம் திருமுழுக்குப் பெற்றது, தனது பணியின் ஆரம்பத்திலே காட்டிய ஒரு முன்மாதிரியான செயலாகும். இயேசுவின் திருமுழுக்கு பற்றிய அறிக்கை மத்தேயு, மாற்கு, லூக்கா ஆகிய மூன்று நற்செய்திகளிலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (லூக்கா : 3-21) மக்கள் திருமுழுக்கு பெறும்போது இயேசுவும் அவர்களோடு சேர்ந்து திருமுழுக்குப் பெற்று, ஜெபித்தபோது தூயஆவியானவர் புறா வடிவில் அவர் மீது வந்து இறங்கினார்.

இவ்வாக்கியத்தினூடாக கீழே தரப்பட்டுள்ள கருத்துக்களை நாம் அறிந்து கொள்ள முடியும்.

- இயேசு தமது தூதுப்பணிக்கு ஆயத்தமானார். அதற்காக அவர் கலிலேயாவிலுள்ள நாசரேத்தில் இருந்து யூதேயாவின் யோர்தான் நதியருகில் வந்தார்.
- திருமுழுக்கு யோவானின் முன்தூதுப் பணியை அங்கீகரித்தார்.
- மனம் திரும்பிய அனைத்து மக்களோடும் ஒன்றிணைந்து இயேசு திருமுழுக்கு பெற்றதன் மூலம் தாழ்மையின் குணாதிசயத்தை வெளிக்காட்டினார்.
- திருமுழுக்கு யோவானின் பணிக்கும் தனது பணிக்கும் இடையே இருக்கும் தொடர்பை வெளிப்படுத்தினார்.

**புதுமை நிகழ்வுகள்**

- வானம் திறக்கப்பட்டது.
- தூய ஆவியானவர் புறாவின் வடிவில் வந்து இறங்கினார்.

## இறை வெளிப்பாடு

இயேசு திருமுழுக்குப்பெற்று ஜெபத்திலிருந்தது போல திருமுழுக்கைப் பெற்ற கிறிஸ்தவரான நாம் நினைவில் கொள்ளவேண்டியது ஜெபத்தின் மூலம் இறைத்தொடர்பை வளர்த்துக் கொள்வது அவசியமாகும்.

**அவ்வேளையில் தூய ஆவியானவர் இறங்கினார்.**
**எமது வாழ்வில் தூய ஆவியானவரின் பிரசன்னம் நிலவும்.**

தண்ணீர் வெளி வாழ்வை தூய்மைப்படுத்துவதோடு தூயஆவியானவர் எமது உள்ளத்தை தூய்மையாக்கி வாழ்நாட்கள் முழுவதும் அருள்பொழிவு செய்கிறார். திருமுழுக்கு யோவான் தன்னிடம் வந்த மக்களுக்கு அதைப்பற்றி விளக்கி இருந்தார். தூய ஆவியானவரால் பூரணமாக்கப்படும் திருமுழுக்கானது அனைத்திலும் புதிய வாழ்வை ஏற்படுத்தும் ஒளிக்கு பயமின்றி தைரியமாக சாட்சி பகிர்வோம்.

## தியானியுங்கள்

கிறிஸ்து இயேசுவின் மீது கொண்டுள்ள நம்பிக்கையினால் நீங்கள் அனைவரும் கடவுளின் மக்களாய் இருக்கிறீர்கள். அவ்வாறெனின் கிறிஸ்துவோடு இணைந்திருக்கும்படி திருமுழுக்கு பெற்ற நீங்கள் அனைவரும் கிறிஸ்துவை அணிந்து கொண்டீர்கள்.

*கலாத்தியர்:* 3:26-27.

## சிந்தியுங்கள்

தூய ஆவியின் திருமுழுக்கைப் பெற்ற கிறிஸ்தவ பிள்ளையாக தூய ஆவி யானவர் உங்களோடு பிரசன்னமாய் இருக்கிறார் என நம்பிக்கைக் கொண்டு அவரின் ஒளியைப் பிரகாசிக்கும் நல்வாழ்வை வாழ்வதற்கு நீங்கள் உங்களை சுற்றியுள்ள அனைவருக்கும் பிரகாசிக்கும் நட்சத்திரம் ஆகுங்கள்.

### செயற்பாடு

1. இயேசுவின் திருமுழுக்கின்போது கடவுள் கூறிய வார்த்தையையும் தோற்றம் மாறுதலின் போது கூறிய வார்த்தையையும் ஒப்பிடுக.

2. ''தூயஆவியும்'' நெருப்பும் இறை அடையாளமாக திருவிவிலியத்தில் முன்வைக்கப்பட்டுள்ள இன்னும் வேறு சந்தர்ப்பங்களை தேடிப்பா ருங்கள்.

3. திருமுழுக்கின் மூலம் தூயஆவியானவரால் பூரண கிறிஸ்தவரான நீர் அதற்கேற்றவாறு எவ்வாறு செயற்படுவீர்?